வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண். 4379/ஆ4/2025 நாள் : 20.03.2026

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 2025–2026–ம் கல்வியாண்டு 1 ஆம் வகுப்பு முதல் 9 வகுப்பு மாணவர்களுக்கான இறுதித் தேர்வுகள் கால அட்டவணை வெளியிடுதல் – அனைத்து வகை பள்ளிகளுக்கு – தெரிவித்தல் – சார்பு.

பார்வை : தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர்,தனியார் பள்ளிகள்இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர்களின் இணைச் செயல்முறைகள், ந.க.எண்.048688 /எம்/இ1/ 2025 நாள் 20.03.2026

-----

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் தனியார் பள்ளிகள்இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர்களின் இணைச் செயல்முறைகளின் படி 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான 1 ஆம் வகுப்பு முதல் 9 வகுப்பு மாணவர்களுக்கான பள்ளி இறுதித் தேர்வுக்கால அட்டவணைகள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேற்காண் விவரத்தினை அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் தங்கள் பள்ளி ஆசிரியர்கள் வாயிலாகவும், தேர்வுக் கால அட்டவணையினை அறிவிப்புப் பலகையில் ஒட்டியும் அனைத்து மாணவர்கள் / பெற்றோர்கள் அறியும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் தனியார் பள்ளிகள்இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர்களின் அறிவுரைகளின் படி செயல்படுமாறு அனைத்து வகை தொடக்க /நடுநிலை /உயர்நிலை /மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது .

இணைப்பு:–

1. **பார்வைக் கடித நகல் மற்றும் தேர்வுக் கால அட்டவணை**

//ஓம். //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்து வகை தொடக்க /நடுநிலை /உயர்நிலை /மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம் .

நகல்:–

- மாவட்டக் கல்வி அலுவலர்( இடைநிலை /தனியார்/ தொடக்கக்கல்வி ), வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
- வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து அனுப்பிவைக்கப்படுகிறது.